රාජ්‍ය පරිපාලනහා කළමනාකරණ අමාත්‍යාංශය
**பொது நிர்வாகமற்றும் முகாமைத்துவஅமைச்சு**
**MINISTRY OF PUBLIC ADMINISTRATIONAND MANAGEMENT**

ඒකාබද්ධ සේවා අංශය **இணைந்தசேவைகள்பிரிவு** **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07,இலங்கை. Independence Square,Colombo 07, Sri Lanka

දුරකතනය
தொலைபேசி:**(94) 011- 2694560**
Telephone

ෆැක්ස්
தொலைநகல்:**(94) 011- 2692254**
Fax

ඊ-මේල්
மின்னஞ்சல்:**dgcs@pubad.gov.lk**
E-mail

වෙබ් අඩවිය
இணைத்தளம்: **www.pubad.gov.lk**
Web Site

---

මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/අන්තර්ග්‍රහණ

ඔබේ අංකය / உமதுஇல / Your No:

දිනය / திகதி: / Date: 2017.10.24

அனைத்து அமைச்சின் செயலாளர்கள்/
அனைத்து திணைக்களத் தலைவர்கள்/
மாவட்டச் செயலாளர்கள்/
பிரதேச செயலாளர்களிற்கு

**<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்தல்</u>**

அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதற்கு விருப்பைத் தெரிவித்த உத்தியோகத்தர்களை உள்ளீர்ப்பு செய்யும் நடவடிக்கைகள் 2017-12-31 ஆந்திகதிக்கு முன் நிறைவு பெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதால், உமது நிறுவனத்தில் இணைக்கப்பட்டு கடமையாற்றுகின்ற மற்றும் உள்ளீர்ப்பிற்காக விருப்பைத் தெரிவித்த போதும் இன்னும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையினுள் உள்ளீர்க்கப் பெறாத அலுவலர்கள் தொடர்பான தகவல்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் பூர்த்தி செய்து 2017-11-15 ஆந்திகதிக்கு முன் எனக்குக் கிடைப்பதற்கு ஆவண செய்யுமாறு தயவுடன் அறியத்தருகிறேன்.

2017-08-14 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2012(III) இல் குறிக்கப்பட்டுள்ளதன்படி அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கை இல.10/2012, 10/2012(I) மற்றும் 10/2012(II) என்பனவற்றின் ஏற்பாடுகளுக்கிணங்க விருப்பைத் தெரிவித்தவர்கள் மற்றும் பொது நிர்வாக சுற்றறிக்கை இல.10/2012(III) இன் ஏற்பாடுகளுக்கிணங்க விருப்பைத் தெரிவித்துள்ள அலுவலர்களிற்கு அவ்விருப்புத் தெரிவை மீண்டும் கேட்டு விலக்கிக் கொள்வதற்கு (வாபஸ் பெறுவதற்கு) சந்தர்ப்பம் இல்லாதொழிக்கப்பட்டிருப்பதால், உள்ளீர்ப்புச் செய்யப்படுவதற்கு விருப்பைத் தெரிவித்த அனைத்து அலுவலர்களினதும் தகவல்களை எனக்கு அனுப்பி வைப்பதற்கு உமது விஷேட அவதானத்தைச் செலுத்துவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

மேலும், இந்நடவடிக்கையைத் திறம்பட ஒழுங்குபடுத்துவதற்கு தகுதியான அலுவலர் ஒருவரைப் பெயரிட்டு அவரைத் தொடர்புகொள்ள முடியுமான தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட்டு அனுப்புமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஒப்பம்/ கே.வீ.பீ.எம்.ஜே. கமகே
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

இணைப்பு

<u>உள்ளீர்ப்பு பெறுவதற்கு விண்ணப்பித்த போதும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு இதுவரை உள்ளீர்ப்பு செய்யப்படாத அலுவலர் தொடர்பான தகவல்கள்</u>

| பெயர் | தேசிய அடையாள அட்டை இல | அலுவலரது கையடக்கத் தொலைபேசி இல | உள்ளீர்ப்பு பெறுவதற்கு விருப்பைத் தெரிவிக்கும் போது கடமையாற்றிய சேவை நிலையம் | உள்ளீர்ப்பிற்காக விருப்பைத் தெரிவித்த திகதி | வேறு |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

மேலுள்ள தகவல்கள் உண்மையென உறுதிப்படுத்துகிறேன்.

……………………………………………………………………………….
(நிறுவனத் தலைவரது கையொப்பம் மற்றும் உத்தியோக முத்திரை)

- அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யப்படுவதற்கு விருப்பைத் தெரிவித்த எனினும் தற்போது கடமையிலீடுபடாத (வேறு பதவியொன்றுக்கு விடுவிப்புப் பெற்ற, சேவையிலிருந்து இராஜினாமாசெய்த, இறந்த, ஓய்வுபெற்ற) அலுவலர் தொடர்பான தகவல்களையும் குறிப்பிடுவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளவும்.

- அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப்பிரமாணக் குறிப்பிற்கிணங்க உள்ளீர்ப்பு பெறுவதற்கு ஆவணங்களை அனுப்பி வைத்துள்ள அவ் ஆவணங்களிலுள்ள குறைபாடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடித இலக்கத்தை **(CS/DOS/Absorb/XXXX)** குறித்து வைத்துக் கொள்ளவும்.